தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர். மு. ஜெகதீசன் Ph.D.,
உதவி மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 2-4-2016

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## வேளாண் பல்கலையில் ஆற்றல் சேமிப்பு விழிப்புணர்வு முகாம்

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக நாட்டுநலப்பணித்திட்டம் சார்பில் பெட்ரோல், இயற்கை எரிவாயு, மின்சாரம் ஆகியவற்றின் தற்போதைய நிலை மற்றும் சேமிப்பு குறித்த விழிப்புணர்வு உரை 2-4-2016 (இன்று) பல்கலைக்கழக பொன்விழா அரங்கில் ஏற்பாடு செய்யப்பட்டது.

பெட்ரோலியம் சேமிப்பு மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தின் பயிற்றுனர், திரு. என். ஆர். வைத்தீஸ்வரன், அவர்கள் இரு சக்கரம் மற்றும் நான்கு சக்கர வாகனத்தில் மாணவர்கள் பெட்ரோல் மற்றும் டீசல் சேமிப்பு எவ்வாறு செய்யலாம் என்பது குறித்தும் சமையல் எரிவாயுவை வீட்டிலும், மின்சாரத்தை கல்லூரி மற்றும் விடுதி வளாகத்தில் மிச்சப்படுத்தும் வழிமுறைகள் குறித்தும் எடுத்துரைத்தார்.

மற்ற நாடுகளை ஒப்பிடும்போது அதிக பட்சமாக இந்தியா 30 – 35 சதவிகிதம் பெட்ரோலியம் இறக்குமதி செய்கிறது. எனவே, அதை முறையாக செலவிட வேண்டும். வாகனங்களில் ரேடியல் டயர் உபயோகம் மூலம் 3 முதல் 7 சதவிகிதம் பெட்ரோல் சேமிக்கலாம் என்று கூறினார்.

மேலும், வீடுகளில் ஐஎஸ்ஐ முத்திரை உடைய அடுப்புகளையே உபயோகப்படுத்த வேண்டும். குளிர் சாதன பெட்டியில் வைத்த பொருட்களை அறை வெப்ப நிலைக்கு வந்த பின்னரே சூடு செய்ய வேண்டும். மைக்ரோவேவ் அடுப்பு மற்ற அடுப்புகளை விட 50 சதவிகித ஆற்றல் சேமிப்பு அளிக்கிறது. அறையில் குளிர் சாதன (Air Conditioner) வசதி இருந்தால் 25 டிகிரி செல்சியஸ் வெப்பத்தில் வைக்க வேண்டும். எல்.இ.டி. மற்றும் டயோட் விளக்குகளை பயன்படுத்தி ஆற்றல் சேமிக்கலாம். முடிந்த அளவு சூரிய சக்தி, காற்று, நீர், உயிர் சக்தி போன்ற சக்திகளைப் பயன்படுத்த வேண்டும். விவசாய பெருமக்கள் சூரிய சக்தி உலர்த்தி, பம்ப் செட் ஆகியவற்றை பயன்படுத்துகின்றனர். இதன் மூலமும் ஆற்றல் சேமிக்கலாம் என்றும் கூறினார்.

பின்னர், மாணவர்களுக்கு ஆற்றல் சேமிப்பு குறித்த புத்தகம், கையேடு ஆகியவை வழங்கப்பட்டது. நூற்றுக்கும் அதிகமான வேளாண் பட்டபடிப்பு நாட்டு நலப்பணித் திட்ட மாணவர்கள் நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.

நிகழ்ச்சி ஏற்பாட்டை தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக நாட்டு நலப்பணித்திட்ட அலுவலர் திருமதி லதா மற்றும் மாணவ பிரதிநிதி செல்வன் வி. ஹாதில் மோன் ஆகியோர் செய்திருந்தனர். முன்னதாக மாணவர் கிருஷ்ணமூர்த்தி வரவேற்புரையும் மற்றும் மாணவி எஸ்.வி. தாரிணி நன்றியுரையும் நிகழ்த்தினர்.

உதவி மக்கள் தொடர்பு அலுவலர்